1973 மார்ச் 30]

யிலும் மத்தியானம் பட்டப்பகலிலும் கவர்மெண்டு எஸ்டேட்டிலும், பழைய ரெவின்யூ போர்டு ஆபீசுகளிலும் உள்ள மரங்களிலிருந்து பச்சை இலை கிளைகளை வெட்டிக் கொண்டு போகிறார்கள். இதுவும் இரும்புக் கம்பிகள் திருட்டு போல தான். இதை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திருட்டை பல நாட்கள் பார்த்துக் கொண்டிருந்தும், கேள்வி வருகிற நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு சொல்லுவதற்குப் பதிலாக ஏற்கெனவே என்னிடத்தில் தெரிவித்திருந்தால், அப்படிப்பட்ட விஷயத்தைக் கவனித்திருப்பேன். முன்பே கவனித்திருக்கலாம். பல கிளைகளைக் காப்பாற்றியிருக்கலாம்.

Transfer of Sub-Collector, Kumbakonam

* 302 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that a resolution was passed at the Tamil Nadu Village Officers Association, Kumbakonam Revenue Division, on 30th August 1972 requesting the Government to transfer the Sub-Collector, Kumbakonam;

(b) if so, the reason for such a resolution; and

(c) the action proposed to be taken by the Government in the matter?

கும்பகோணம், மாவட்டத் துணை ஆட்சியாளரை மாற்றுதல்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கும்பகோணம், மாவட்டத் துணை ஆட்சியாளரை மாற்றுமாறு அரசைக் கோரி, 30—8—1972 ஆம் நாள், கும்பகோணம் வருவாய்க் கோட்டம், தமிழ் நாடு கிராம அதிகாரிகள் சங்கம், தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது உண்மையா?

(இ) ஆமெனில், அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றியதற்கான காரணம் யாது?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

'[1973 மார்ச் 30

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) : கும்பகோணம் சப் கலெக்டரை வேறு இடத்திற்கு மாற்றுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அரசுக்கு வேண்டுகோள் விடுக்கும் தீர்மானம் ஒன்றை 17—8—1972 அன்று (30—8—1972 அன்று அல்ல) கும்பகோணம் கோட்டம், தமிழ்நாடு கிராம அதிகாரிகள் சங்கம் நிறைவேற்றியது. எனினும், இத்தீர்மானம் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அரசுக்கோ சங்கத்தால் அனுப்பப்படவில்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அந்தத் தீர்மானம் எதற்காக நிறைவேற்றப்பட்டது என்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த அதிகாரி அங்குள்ள கிராம அதிகாரிகள் 30 பேர்களை சஸ்பெண்டு செய்தார். அதற்குக் காரணங்கள் கேட்கப்பட்டபொழுது, வசூல் பண்ணுவதில் மந்த மாக இருந்ததற்கு 14 பேர்கள், பணக் கையாடலுக்கு 6 பேர்கள், ஜமாபந்தி கணக்கு முடிக்காததற்கு 8 பேர்கள், பணியாற்றும் கிராமத்தில் குடியிருக்காத காரணத்திற்காக ஒருவர், கணக்குகளைத் தவறான நோக்கத்தோடு திருத்தியதற்காக ஒருவர், ஆக மொத்தம் 30 பேர்களை சஸ்பெண்டு செய்தார் என்றும், 17 பேர் சஸ்பெண்டி லிருந்து விடப்பட்டார்கள் என்றும் தெரிய வருகிறது. அதை யொட்டி கிராம அதிகாரிகள் அந்த அதிகாரியின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டுமென்று விரும்பவில்லை என்று நமக்குத் தகவல்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ஜமாபந்தியின் போது இந்த கிராம அதிகாரிகளிடத்தில் அவர் மிகுந்த அகங்காரத் தோடு (ஆங்கிலத்தில் "அரகண்ட்") நடந்துகொண்டார். அதனுடைய காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி, இவர்கள் அங்கே புகார் செய்ததாகத் தெரிகிறது. புகார் செய்த பிறகு புகார் ஏன் செய்தீர்கள் என்று நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிய வருகிறது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது தீர்மானத்தினுடைய வாசகமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். நான் எனக்குக் கிடைத்த தகவலைச் சொன்னேன்.

1973 மார்ச் 30]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அவர் மாற்றப் பட்டுவிட்டாரா, அங்கேயே இருக்கிருரா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : நமக்கு இந்தத் தீர்மானம் அனுப்பப்பட்டு மாற்றவேண்டுமென்று சொல்லவில்லை. ஆகவே அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனுல் சப் கலெக்டர் பாலகிருஷ்ணன் என்பவர் குடும்ப வேலையைக் கவனிக்க 13—1—1973 முதல் 27 நாட்கள் "எர்ன்ட் லீவ்" எடுத்திருக்கிருர். திரும்பி வந்தவுடன் இங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்றப் பட்டிருக்கிருர்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, இப்படி கீழே பணியாற்றும் சிப்பந்திகள் தங்களுடைய மேல் அதிகாரிகள் கடமை யைச் செய்கிறபொழுது மாற்றவேண்டுமென்று மனுக் கொடுத் தாலோ, தீர்மானம் நிறைவேற்றிஞலோ, அரசாங்கம் அதற்கு நடவடிக்கை எடுத்தால் இது தொடர்கதையாக வரும். இப்படிப் பட்ட தீர்மானத்தை அரசு ஆதரிக்குமா அல்லது ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : தலைவர் அவர்களே, அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே இந்த மாறுதல் நடைபெற வில்லை. ஏனென்ருல் தீர்மானம் நிறைவேற்றியது 17—8—1972-ல். இந்த அதிகாரி லீவில் போனது 13—1—1973-ல். திரும்பி வந்த பிறகு அவர் அங்கிருந்து உதகமண்டலத்துக்கு "ஆதரைஸ்டு ஆபீசர் ஆஃப் லேண்டு ரிபார்ம்ஸ்" ஆக அனுப்பப்பட்டிருக்கிருர். நிர்வாக வசதிக்காகச் செய்யப்பட்ட மாறுதலே தவிர நெருக்கடிக்காக அல்ல.

National Cadet Corps.

* 303 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that a complaint has been received by the Director of School Education during April 1972 about the irregularity in the selection of National Cadet Corps Officers at Government High School (Boys), Nannilam; and

(*b*) if so, the nature of the complaint and the action taken thereon?